ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2036/40 - 2017 සැප්තැම්බර් මස 15 වැනි සිකුරාදා - 2017.09.15
*2036/40 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 15 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது குறிப்பு இல.: கேடீஎஸ்/எச்ஏஆர்/4/2/2/21.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4/3/8/2013/சீசீ/54.

க/கடு/குருந்துகொல்ல மத்திய மகா வித்தியாலயத்தின் தேவைக்காக கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மத்திய மாகாணத்தில், கண்டி மாவட்டத்தில், ஹாரிஸ்பத்துவ பிரதேச செயலாளர் பிரிவில், குமுகம்மன சியபத்து உப பிரிவில், குருந்துகொல்ல கிராமத்தில் அமைந்துள்ள, கண்டி மாவட்ட சிரேஷ்ட நில அளவை மாஅதிபரால் அளந்து தயாரிக்கப்பட்ட இல. மஹ/6709 ஆம் இலக்க வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 0.0758 ஹெக்டயார் அளவு விஸ்தீரணம் கொண்ட 03 காணித் துண்டுகளின் விபரங்கள் பின்வருமாறு:-

1. **துண்டு இல. 01**
காணியின் பெயர் : பரகஹமுலகும்புர ; விபரம்: - ; உரிமை கோருபவர்: ஏ. ஆர். எம். நவாஸ், இல. 37/4, குருந்துகொல்ல, வெரலகம; விஸ்தீரணம்: 0.0.0654 ஹெக்டயார்.

2. **துண்டு இல. 02**
காணியின் பெயர் : பரகஹயடபேல ; விபரம்: - ; உரிமை கோருபவர்: தெரியவில்லை; விஸ்தீரணம்: 0.0.0092 ஹெக்டயார்.

3. **துண்டு இல. 03**
காணியின் பெயர் : பரகஹமுலகும்புர ; விபரம்: - ; உரிமை கோருபவர்: ஏ. ஆர். எம். நவாஸ், இல. 37/4, குருந்துகொல்ல, வெரலகம; விஸ்தீரணம்: 0.0.0012 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக் காரர் மூலமாக 2017 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 11 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு ஹாரிஸ்பத்துவ பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2017 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 11 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இருபிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

ஜே. எம். ஜே. கே. ஜயசுந்தர,
பிரதேச செயலாளர்,
ஹாரிஸ்பத்துவ.

பிரதேச செயலகம்,
ஹாரிஸ்பத்துவ,
2017, திசெம்பர் 11.

*9 - 876*


*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*